நான் ஸ்ரீ குமரன் கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் அரசு ஒப்பந்ததாரராக உள்ளேன். சாலை வேலை எடுத்து செய்து கொண்டுள்ளேன். எங்களுக்கு ரோடு வேலை சம்பந்தமான பொருட்கள் தட்டுப்பாடாக உள்ளது. இதனால் பக்கத்து மாவட்டங்களில் இருந்து பொருட்கள் வாங்கும் நிலை உள்ளது. இங்கு உள்ள க்ரஷர்களுக்கு பொருட்கள் பற்றாக்குறையாக உள்ளது. அதனால் இங்க அதிகப்படியான குவாரிகள் திறந்தால் மட்டுமே எங்களால் சமாளிக்க இயலும். பொருட்களின் பற்றாக்குறை நீங்கும் பொருட்டு விரைவாக இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்.

**8. கார்த்திகேயன், செட்டிபாளையம்**

நான் போக்குவரத்து நிறுவனம் நடத்தி வருகிறேன். இவர்களுடைய லைசன்ஸ் மூலம் நான் போக்குவரத்து பொருட்கள் சப்ளை செய்து வருகிறேன். அதனால் வெளியில் வேறு எங்கும் பொருட்கள் எடுக்காமல் இருந்தேன். இப்பொழுது இவர்களுடைய லைசன்ஸ் முடிந்த உடன் என்னால் பொருட்கள் எடுக்க இயலவில்லை. எனவே போக்குவரத்து தொழில் சரியாக இயங்கவில்லை. ஆகவே, விரைவாக இவர்களுக்கு உரிமம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுகொள்கிறேன்.

**9. திரு.கமலம் & co., சூலூர்**

நாங்கள் R-Square கன்ஸ்ட்ரக்சன் நிறுவனம் நடத்தி வருகிறோம். நாங்கள் ஒரு இன்ஜினியர். ஏற்கனவே போக்குவரத்து பிரச்சனையால் மூலப்பொருள் விலை உயர்ந்து வருகிறது. எங்களால் கட்டடம் கட்ட முடியவில்லை. நாங்கள் சூலூர் சுற்று வட்டார பகுதியில் இருப்பதால் எங்களுக்கு இந்த பகுதியில் கல்குவாரி அனுமதி கொடுத்தால் எங்களுக்கு பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும். அதனால் விரைவாக அனுமதி வழங்கினால் பொதுமக்கள் மற்றும் எங்களின் வாழ்வாதாரம் உயரும். எனவே விரைவாக அனுமதி வழங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்.

**10. திரு.கவின்குமார்.**

நான் க்ரஷர் இயக்கி வருகிறேன். குவாரியிலிருந்து கற்கள் வராததால் நாங்கள் அதிகமான விடுமுறை விட வேண்டியதாக உள்ளது, தட்டுப்பாடுகள் அதிகமாக உள்ளது. குவாரிக்கு உரிமம் கொடுப்பதால் எங்களுக்கு மூலப்பொருட்கள் கிடைக்கும். எங்களால் க்ரஷர் இயக்க முடியும். எனவே, உரிமம் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்.

**11. கிஷோர், மலுமிச்சம்பட்டி**

நான் வெங்கடேஸ்வரா பில்டிங் மெடீரியல் என்ற பெயரில் பொருட்கள் சப்ளை செய்து வருகிறேன். இந்த குவாரிக்கு உரிமம் கொடுத்தால் மூலப்பொருட்கள் தட்டுபாடு இல்லாமல் கிடைக்கும். என்னால் பத்து குடும்பம் பயன் அடையும் என்று தெரிவித்துகொள்கிறேன்.

**12. திரு.ரவி,**

நான் க்ரஷர் மெயிண்டனன்ஸ் ஆபரேஷேன் காண்ட்ராக்டராக உள்ளேன். என்னிடம் 40 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். மூலப்பொருட்கள் இல்லாததால் என்னால் தொழில் செய்ய இயலவில்லை. தயவு செய்து இவர்களுக்கு அனுமதி வழங்கினால் எங்களின் வாழ்வாதாரம் நன்றாக இருக்கும். எனவே தயவுசெய்து அனுமதி வழங்குமாறு கேட்டுகொள்கிறேன்.

**13. திரு.சுரேஷ், மலுமிச்சம்பட்டி.**

நாங்கள் கணபதி கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தில் ஹாலோ பிளாக் வைத்துள்ளோம். அதனால் இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கி எங்களுக்கு சேவை செய்ய உதவுமாறு கேட்டுகொள்கிறேன்.

**14. திரு.பிரிஜேஷ். செட்டிபாளையம்.**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கு நன்றி, DRO அவர்களுக்கு நன்றி. நீங்கள் இவ்வளவு தெளிவான திட்ட அறிக்கையை எங்களுக்கு திரையில் காண்பித்து எங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்கு மிக்க நன்றி. நான் கோவை மாநகராட்சி பகுதியில் சாலை மேம்பாட்டு பணியும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்-ல் குழாய் அமைக்கும் பணியும் செய்து வருகிறேன். இதனால் நாங்கள் செய்யும் தொழிலில், சாலை மேம்பாட்டு பணிகள் மறுசீரமைப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. காரணம் என்னவென்றால் எங்களுக்கு தேவையான மூல பொருட்கள் குறித்த நேரத்தில் கிடைப்பதில்லை. அதனால் பொதுமக்கள் அன்றாட வேலைக்கு செல்ல சிரமமாக உள்ளது. மாநகராட்சி பகுதியில் இதனால் அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. நாங்கள் செட்டிபாளையம் பகுதியில் தார் பிளான்ட் அமைத்துள்ளோம். அதற்கான மூல பொருட்கள் கிடைத்தால் குறித்த நேரத்தில் தார் சாலை மறுசீரமைப்பு பணிகளை செய்து துரிதமாக கொடுத்து அரசுக்கு நல்ல பெயர் எடுத்து கொடுப்பது எங்களுடைய நோக்கம். எனவே இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**15. திரு.ஜெயகுமார், காரச்சேரி**

நான் க்ரஷர் நிறுவனம் வைத்துள்ளேன். கற்கள் கிடைக்காத காரணத்தால் அதிகமாக க்ரஷர் இயக்க இயலவில்லை, சப்ளையர்களுக்கு கொடுக்க முடியவில்லை. எனவே அரசு இந்த குவாரிக்கு அனுமதி கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துகொள்கிறேன்.

**16. திரு.கதிரவன், கிணத்துக்கடவு.**

நான் சொந்தமாக ஐந்து வண்டி வைத்துள்ளேன். பொருட்கள் இல்லாத காரணத்தால் என்னால் வண்டி ஓட்ட முடியவில்லை. பொருட்கள் அதிகமாக கிடைப்பதில்லை. எனவே இந்த குவாரிக்கு அனுமதி கொடுத்தால் சிரமமின்றி இருக்கும்.

**17. திரு.பிரவீன், ஈச்சனாரி .**

நான் பில்டிங் கன்ஸ்ட்ரக்சன் மற்றும் கன்சல்டேசன் செய்து வருகிறேன். மூலப்பொருட்கள் கிடைக்காத காரணத்தால் குறித்த நேரத்திற்கு பொருள் கிடைப்பதில்லை. அதனால் வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் கொடுக்க முடியவில்லை, ஆட்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. குவாரி அதிகரித்தால் மூலப்பொருட்கள் அதிகரிக்கும். அதனால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**18. திரு. முகிலன், செயலாளர் தமிழ்நாடு விவசாய பாதுகாப்பு சங்கம்**

கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமம் கோவை தெற்கு இணைந்து நடத்துகின்ற கோவை மாவட்டம் சூலூர் வட்டம் **பச்சாபாளையம்** கிராமம், **புல எண்** 238/1, 1.98 hectare, பரப்பளவில் அமையக்கூடிய சண்முகம் அவர்களுடைய சாதாரண கல் மற்றும் கிராவல் **குவாரிக்கான** பொதுமக்கள் கருத்து கேட்பு **கூட்டத்தின்** தலைவர் எங்கள் பெரு மதிப்புக்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும் இதை முன்னிலை வைத்து நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் **பொறியாளர் அவர்களுக்கும்**, இங்கு பங்கெடுத்துள்ள பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் தமிழக விவசாயிகள் மற்றும் தமிழக சுற்றுச்சூழல் **இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் இருந்து வந்து** கலந்து கொண்டவர்களுக்கும் கல்குவாரி உரிமையாளர்களுக்கும் இந்த கல் குவாரியினால் பல்வேறு வகையில் பலனடைய கூடிய பொதுமக்களுக்கும் **மற்றும்** அனைவருக்கும் நாங்கள் சார்ந்துள்ள **தமிழ்நாடு** சுற்றுச்சூழல் **பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக** எங்களுடைய வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் **தெரிவித்துகொள்கிறேன்.** இந்த கருத்து கேட்பு கூட்டம் குவாரியால் என்ன பயன் என்பதற்கு அல்ல. ஏற்கனவே திட்ட வடிவமைப்பாளர் கூறியது

போல இந்த குவாரி இயங்கினால் **காற்று**, நீர், மண் மற்றும் ஒலி மாசு கட்டாயம் ஏற்படும் பல்லுயிர் சூழல் பாதிக்கப்படும். சமூக பொருளாதார **சூழல் பாதிக்கப்படும் . அதை எவ்வாறு சரி செய்வோம் என்பதற்கான** சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை கிட்டத்தட்ட 400 பக்கம் கொடுத்து, அதை சுருக்க அறிக்கையாக திட்ட வடிவமைப்பாளர் சில விஷயங்களை **கூறினார்**. அந்த **அடிப்படையில்** இந்த குவாரி **இயங்குமா?** இயங்க முடியுமா? என்பதைப் பற்றி பேசுவதற்காக வந்துள்ளேன்.

முதலில், இந்த குவாரி **அமைந்துள்ள இடத்தினுடைய சைட் க்ரைடீரியா என்று சொல்வார்கள்,** இந்த கிராம நிர்வாக அலுவலர் தன்னுடைய அறிக்கையில், இந்த குவாரி அமையக்கூடிய **புலத்திலிருந்து** 300 மீட்டர் சுற்றளவிற்கு எந்த வீடுகளும், எந்தக் கோயில்களும் இல்லை என்று அவர் தன்னுடைய அறிக்கையில் கொடுத்திருக்கிறார். அது அப்படித்தான் இருக்கிறதா? **என்பதை** பற்றி நாங்கள் சென்று, இவர்கள் கொடுத்திருக்கக்கூடிய ஆவணங்களில் பார்த்தோம். அந்த ஆவணங்களின் அடிப்படையில் **பார்த்தால்**, இந்த **புல எண்.** 238. இதை **இவர்கள்** கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலே **பார்த்தால்** 238-லேயே வீடு இருக்கு **வருவாய்த்துறை ஆவணங்களில்**, வீடு இருக்கிறது. இந்த அறிக்கையிலேயே கொடுத்திருக்கிறார்கள். இது இன்னொரு குவாரியினுடைய அறிக்கையிலிருந்து எடுத்தது. 238/1ல் வீடு இருப்பது இதில் காட்டப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, இது இவர்கள் சொல்லக்கூடிய, இங்க **கம்ப்யூட்டர் எடுத்த,** FMB.**லேயும்** அந்த வீடு காட்டப்பட்டிருக்கிறது. குவாரி புலத்திற்கு உள்ளே வீடு இருப்பதாகவும் காட்டப்பட்டிருக்கிறது. **நேரில் சென்று** பார்த்தால் அந்த வீடு இருக்காது, ஆனால் கம்ப்யூட்டர் FMB -யைப் பொறுத்தவரைக்கும் வீடு இருக்கிறது. இதை பொறுத்தவரை வீடு இருப்பது வருவாய்த்துறை ஆவணங்களில் இருக்கிறது. FMB-ல இருக்கிறது, வில்லேஜ் மேப்ல இருக்கிறது, ஆ பதிவேட்டுல இருக்கிறது. அந்த வீடு இடிந்துள்ளது, இல்லையென்றால் **சிதிலம் அடைந்துவிடுகிறது. இல்லையென்றால்** அந்த வீட்டை குவாரிகாரர் வாங்கி இடித்துள்ளார்கள். இப்படி எல்லாம் இருந்தால், அதை என்ன செய்வது என்பதற்கான வகையில் நாங்கள் தகவல் உரிமை **ஆணையத்தில்** கேள்வி கேட்டு, அதற்கு பதிலும் கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட நில அளவை அலுவலகத்தினுடைய உதவி இயக்குனர் ஹரிதாஸ் அவர்கள் 2/9-ல கடிதம் கொடுத்திருக்கிறார் **எல்லா சர்வேயர் அவர்களுக்கும் சுற்றறிக்கை அனுபியுள்ளார்கள்.** என்ன சொல்லியிருக்கிறார் என்றால் யுடிஆர் மற்றும் நத்தம் நில

அளவை புல வரைபட பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வீடு **சிதிலம்** அடைந்து அல்லது இடிந்திருந்தாலோ, அது ஆரம்ப நிலையில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்ததோ அவ்வாறே பதியப்பட வேண்டும் என்றும், **கல்குவாரி** தொடர்பாக தூர அளவீடு வரைபட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட வீடு, வீட்டுமனை, ஓடை, பாதை ஆகியவற்றை கிராம வரைபடம், புல வரைபடம் மற்றும் ஆ பதிவேடு ஆகியவற்றை சரிபார்த்து வழங்க வேண்டும் **என்று** சொல்லிருக்கார். வருவாய் ஆவணங்களில் வீடு அல்லது ஊர் நத்தம், அங்கீகரிக்கப்பட்ட மனை என்று வந்து**விட்டால்**, அது வேறொன்றாக மாற்ற முடியாது. அதற்கு தனி உத்தரவு கொடுத்தால் தான் **மாற்ற** முடியும். **அப்பொழுது** அந்த வீடு இருக்குதா இல்லையா என்பது அல்ல. ஆனால் வருவாய் ஆவணங்களில் அந்த வீடு இருப்பதால், இங்க குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. அதேபோல, இந்த குவாரி அமையக்கூடிய புலத்தை ஒட்டி இருக்கக்கூடிய **புல எண்.** 237 அதையும் நாங்கள் எடுத்து பார்த்தோம். அதில் இரண்டு வீடு இருக்கிறது. 237 **புல எண் ல்** கம்ப்யூட்டர் FMB-ல இரண்டு வீடு இருக்கிறது. இந்த இரண்டுக்குமே **கல்குவாரி புலத்திலிருந்து** 120m இடைவெளி இருப்பது வருவாய்த்துறை ஆவணங்களில் உள்ளது.

புல எண்.177 இது குவாரியினுடைய தென்கிழக்கு பகுதியில் 290-வது மீட்டர்ல் மூன்று வீடுகள் இருக்கிறது. இதுவும் வருவாய்த்துறை ஆவணத்தில் உள்ளது. அது மட்டுமல்ல, குவாரியினுடைய கிழக்கு பகுதியில் புல எண். 242, 248 மீட்டரில் வீடு இருக்கிறது. 295 மீட்டரில் வீடுகள் இருக்கு. குவாரியினுடைய கிழக்குபுற பகுதியில் கருப்பு சாமி கோவில் இருக்கிறது. கோமுகி கல்குவாரியை ஒட்டியே கருப்புசாமி கோவில் இருக்கிறது. அது கூகுள் படங்களில் காட்டப்பட்டு இருக்கிறது. இப்படி, புல எண் 238, குவாரி புலத்திலேயே வீடு, குவாரிக்கு கிழபுற பகுதியில் வீடு, குவாரியினுடைய தென்கிழக்கு பகுதியில வீடு, குவாரியினுடைய கிழக்கு பகுதியில் வீடு, கிழக்கு பகுதியில் கருப்பு சாமி கோவில் என்ற இத்தனை அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளது. வீடு என்று சொன்னால், எல்லா வீடும் வராது. நம்ம 50 லட்சம் ரூபாய் செய்து கூட வீடு கட்டியிருக்கலாம். அந்த வீடுக்கு வரியோட கட்டியிருப்போம். ஆனால், அந்த வீடு கணக்கில் வராது. பஞ்சாயத்து அப்ரூவல் இருக்கணும். நீங்க வந்து அதுக்கு பிளான் போட்டு கொடுத்து, பஞ்சாயத்து அப்ரூவலோ அல்லது டிடிசிபி அப்ரூவோ வாங்கி இருந்தால் அங்கீகரிக்கப்பட்ட வீடு. இல்லை என்றால், வருவாய் துறை ஆவணங்களில்

அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இப்படி, இந்த வீடுகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்ட வீடுகளாக வருவாய் துறை ஆவணங்களில் **காட்டப்பட்டு இருப்பதால்**, சட்ட அடிப்படையில் **இல்லாததால் சண்முகம் அவர்களுடைய கல்குவாரிக்கு சட்டப்படி அனுமதி** கொடுக்க முடியாது, கொடுக்க கூடாது என்று கூறுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, பொதுச்சாலை, இந்த குவாரி அமையக்கூடிய புலத்திலிருந்து 50 m தூரத்தில் தார் ரோடு இருப்பதாக சொல்லிருக்கிறார்கள். தார் ரோடு என்பது, வண்டி பாதை செயற்கையாக போடப்பட்ட, வண்டி பாதையா இருந்தால் 50m இடைவெளி கொடுக்க வேண்டும். கொடுத்திருக்காங்க. "நாங்கள் 50m இடைவெளி விட்டு குவாரி அமைப்போம்" என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்களுடைய அறிக்கையிலேயே போன முறை, 2019-ல் அதுக்கு லீஸ் கொடுக்கும் பொழுது, அதற்கு 50m இடைவெளின்னு சொல்லிருக்காங்க. ஆனால், நீங்க இந்த படத்தை பாருங்கள். **இது** பிபிடில போட்டு **காண்பித்த** படம். இந்த அனுமதிக்கப்பட்ட பரப்பை விட **அதிகமாக** வெட்டி எடுத்து **விட்டார்கள்**. ஆனால் ரோடு வரைக்கும் வெட்டி எடுத்திருக்காங்க. அப்போ, சாலைக்கு 50m இடைவெளி **விடவில்லை**.. இடைவெளி விடாமல் **செய்துவிட்டு**, நாங்கள் 50m இடைவெளி விட்டு குவாரி இயக்**குவோம்** என்று **சொல்லியிருக்கிறார்கள்.** இது ஒரு தவறான தகவல். அதுமட்டுமல்லாமல், குவாரியினுடைய 300m சுற்றளவில் தொழிலாளருடைய தற்காலிக, நிரந்தர குடியிருப்பு இருக்கக் கூடாது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில், மே 1 ஆம் தேதி அன்று, விருதுநகர் மாவட்டம் ஆவியூரில், வெடிச்சம்பவம் ஏற்பட்டு, ஆறு பேர் உயிரிழந்தார்கள். செயல்முறை ஆவணங்களில் தெளிவா கொடுத்திருக்கார்கள். குவாரியைச் சுற்றி 300m-க்குள் தற்காலிக, நிரந்தர தொழிலாளர் குடியிருப்பு இருக்கக் கூடாது. இந்த வெடிச்சம்பவம் நடந்த பொழுது, அங்க 2km வரைக்கும் பாதிக்கப்பட்டிருந்தது. இங்க கூட அருகில் **கடந்த ஆண்டு விஜயலட்சுமி குவாரி** பாதிப்புக்கு**ள்ளானது**. 3 km தள்ளி இருக்கக்கூடிய சூலூர் ஏர்போர்ஸ் பாதிக்கப்பட்டது. அதனா**ல்** தான், யாரும் **குடியிருக்க** கூடாது. எல்லோருடைய உயிரும் ஒன்று தானே. தொழிலாளர் உயிர்னா மட்டும் **ஒன்று, மற்றவர்கள் உயிர் என்றால் ஒன்று என்று அல்ல**. அந்த அடிப்படையில், இந்த குவாரியைச் சுற்றி நிறைய தொழிலாளர் குடியிருப்புகள் **இருக்கிறது. அதனால்** இந்த குவாரிக்கு, சட்ட அடிப்படையில் அனுமதி கொடுக்க முடியாது. அதற்கடுத்தபடியாக, இவர்கள் **காண்பித்த** எல்லாமே

கூகுள் படங்களாக **காண்பித்து உள்ளார்கள்**. நாங்களும் கூகுளில் **அச்சரேகை தீர்க்கரேகை** அடிப்படையில், இவர்கள் எடுத்திருக்கும் எல்லைக்**கல்லில்** இருந்து, கூகுள் படங்களை எடுத்து, ஆய்வுக்கு **உட்படுத்தினோம்.** அப்படி ஆய்வுக்கு உட்படுத்தியபோது, எங்களுக்கு பெரிய அதிர்ச்சி இருந்தது. காரணம், நான் இந்த ஊர் கிடையாது. ஆனால், **அரசு வெளியிட்டுள்ள ஆவணங்களும், அரசு** ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆவணங்கள் அடிப்படையில பேச வந்திருக்கோம். இவர்களைப் பொருத்தவரைக்கும், இந்த குவாரி **புலத்தில்** இருந்து, வடகிழக்கு புறத்துல 143m-ல் வீடுகள் இருக்கு. கிழக்கு புறத்துல, 220m- கருப்புசாமி கோயிலும், 243m-ல் ஒரு வீடும், 288m-ல் ஒரு வீடு இருக்கு. அதேபோல, தென்கிழக்கு புறத்தில் பார்த்தீர்களானால், 290m- மற்றும் , 269m-ல் வீடுகள் இருப்பது கூகுள் **படங்களில் காட்டப்பட்டுள்ளது**. அதேபோல, தெற்கு புறத்தில் 145m, 260m , 173m-, 177m-, 178m-ல் வீடுகள் இருக்கிறது. மேற்கு புறத்தில், 297, 108, 77, 57, 88, 154m தூரத்தில் வீடுகள் உள்ளதை காட்டியிருக்கிறார்கள். தென்மேற்கில் 203m, 261m-ல வீடுகள் இருக்கிறது. வடமேற்கில் 167m-ல் இருக்கிறது. எனக்கு நேரம் கிடைக்காததால் **பிரிண்ட்** எடுக்க **முடியவில்லை**. இது எல்லாமே நாங்க கூகுள் படங்களில் இருந்து எடுத்து வைத்துள்ளோம். உங்களுக்கு அறிக்கை நான் கொடுக்கிறேன். இந்த வீடுகள் எல்லாமே கூகுளில் காட்டப்பட்டுள்ளது. அடுத்ததாக, இந்த குவாரியை பொறுத்தவரை, குவாரி இயங்க தொடங்குவதற்கு முன்பே குவாரியினுடைய வடபுற பகுதியில் அதிகமாக வெட்டி எடுத்து இருக்கிறார்கள். இது இல்லீகல் மைனிங். வெறும் கனிமத்தை வெட்டி எடுப்பதற்கு இங்க பல **குவாரிகளுக்கு** அபராதம் போட்டு இருப்பதை பார்த்திருக்கோம். ஆனால், இதற்கு வெடிமருந்து எப்படி **வந்தது என்பது** ஒரு கேள்வி. இதற்கு சட்டப்படியாக வெடிமருந்து எப்படி வந்தது? எனவே, இதன் மீது வெடிமருந்து சட்டப்படி, அதிகப்படியாக வெட்டி எடுக்கப்பட்ட கனிமங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் . அதே மாதிரி, குவாரி பகுதியிலிருந்து 500m தூரத்திற்கு மேல்நிலை **நீர்தேக்க தொட்டியோ,** தண்ணீர் இருக்கக்கூடிய **போர்வெல்லோ** இருக்கக்கூடாது. ஆனால், இங்கே,500 m தூரத்திற்குள் ஊரே இருக்கிறது, ஊர் நத்தம் இருக்கிறது. அதில் மேல்நிலை தொட்டியும் மற்றும் தண்ணீர் இருக்கின்ற இடங்கள் இருக்கிறது. எனவே, சட்ட அடிப்படையில் சிறிய கனிமங்கள் விதியின் படி அதற்கு அனுமதி கொடுக்க முடியாது. அதற்கு அடுத்தபடியாக, இந்த குவாரியைச் சேர்ந்தவர் இப்படி சொல்லியிருக்கிறார். 'நாங்க 95 மரங்களை 5 ஏக்கரில் நட்டு பசுமை அரண் அமைக்க உள்ளோம்.

**ஏற்கனவே**, இந்த குவாரி இரண்டு முறை லீஸ் வாங்கி இருக்காங்க. இரண்டு முறை லீஸ் வாங்கினர்கள் என்றால், கடந்த காலங்களில், கிரீன் பெல்ட் எதுவுமே இல்லை என்று கூறியுள்ளார்கள்.. சொல்லும் மரங்களை **நடவில்லை என்பது தான்** பிரச்சனையாக இருக்கிறது. எனவே, அதை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதே போல, வெடிகளை பொறுத்தவரை **நாணல்** வெடிகளை மட்டும்தான் பயன்படுத்த **வேண்டும்**. அதுவும் சத்தம் இல்லாத மட்புல் பயன்படுத்த வேண்டும். ஆனால், நடைமுறையில் **அவ்வாறு** இல்லாமல் இருக்கிறது. அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, **சட்டவிரோத வெடிமருந்துகளை** பயன்படுத்தினால் வெடிமருந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அடுத்ததாக, ஏற்கனவே நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள், கடந்த 23-7-2025 அன்றைக்கு ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அனைத்து குவாரிகளையும் கணக்கெடுத்து இயங்கிக் கொண்டிருக்கிற அல்லது இயங்கி முடிந்த குவாரியாக **இருக்கலாம். எல்லா** குவாரி**யும், ஒரு மீட்டர்க்கு முன்னூறு ரூபாய் வீதம் கம்பி வேலி அமைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். பெரும்பாலான குவாரிகளில் கம்பிவேலி இல்லை. இந்த ஆண்டு மட்டும் இதுவரை** 70 **பேர் இறந்துள்ளார்கள். திருப்பூரில் நான்கு பேர் இறந்துள்ளார்கள். அதனால் கம்பிவேலி அமைக்க பணம் இல்லை என்றல்** DMF **என்று சொல்லகூடிய** DISTRICT MINING FUND-**ல் இருந்து எடுத்து செலவு செய்யசொல்லி** மரியாதைக்குரிய **தலைமை செயலாளர் அவர்கள்** 23-7-2025 **ல் உத்தரவிட்டு செப்டெம்பர் -க்குள் நடைமுறை படுத்தவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இரண்டு வருடம் முடிந்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் இறப்பு நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இங்கு பலரும் சொல்வது பொருட்கள் பற்றாக்குறை என்று**. இன்றைய தமிழக முதலமைச்சர் அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது, நவம்பர் 22, 2017-ஆம் ஆண்டு தமிழ்நாட்டினுடைய மணல் **தேவைக்கு இயற்கை வளங்கள் பறிபோவதை** தடுக்கும் வகையில், வெளிநாட்டில் இருந்து மணல் இறக்குமதி செய்து விற்பனை செய்ய வேண்டும். **ஏன்**, அரசாங்கம் செய்யவில்லை என்ற கேள்வியை அடுக்கியிருந்தார். இதே கருத்தை அந்தப் பாட்டாளி மக்கள் கட்சி மட்டும் பல கட்சிகளும் சொல்லி உள்ளார்கள். தமிழகத்தில் **ஐந்து அரசாணைகள்** உள்ளது.

தமிழகத்தினுடைய தேவை 15 லட்சம் மெட்ரிக் டன். வெளிநாட்டு **இயற்கை ஆற்று மணலை** அரசு கொள்கை முடிவாக எடுத்து, **தென்கிழக்கு ஆசிய** நாடுகளிலிருந்து அரசு **ஏற்கனவே போட்ட அரசாணை** அடிப்படையில் கொண்டு வந்தால் நன்று. கல்குவாரியை **பொறுத்த** வரையில், அதில் இருக்கக்கூடிய பொருட்களை **சாலைக்கோ** அல்லது **அஸ்திவார கல்லுக்கோ** கொடுக்க பிரச்சனை இல்லை. எம்.சாண்ட்ஸ் **தயாரிக்கிறதோ,** அல்லது எம்.சாண்ட **அண்டை மாநிலத்திற்கெல்லாம் கடத்துவது தான்** பெரிய பிரச்சனையா உள்ளது. **அதனால்,** ஆற்று மணலும் வேண்டாம், செயற்கையான கல்மணலும் வேண்டாம். ஏற்கனவே, தமிழ்நாடு அரசு **வெளியிட்ட ஐந்து அரசாணை** அடிப்படையில் வெளிநாட்டு **இயற்கை ஆற்று** மணலை இறக்குமதி செய்ய வேண்டும். தமிழக அரசு அதற்கான கொள்கை முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதுமட்டும் இல்லை. இந்த **குவாரி** உரிமையாளர் 300m தூரத்தில் வீடு கிடையாது. அதேமாதிரி 500m தூரத்தில் பள்ளிக்கூடங்களே கிடையாது. என்று கூறியுள்ளார். இதற்கு தமிழ்நாடு **மாசு** கட்டுப்பாடு வாரியம் வெளியிட்ட தொழில் முனைவோர்களுக்கான கையேடு புத்தகத்தில், **பக்க எண்.** 168, 169 என்ன சொல்கிறார்கள் என்றால், சுற்றச்சூழல் நிர்வாகம் பற்றிய விவரங்கள் **எனது அறிவுக்கு எட்டிய வரையிலும், நான் அறிந்த வரையிலும், மேற்காணும் புள்ளி** விவரங்களும் தகவல்களும் உண்மை என்று நான் இதன் மூலம் **உறுதி** அளிக்கிறேன். அளிக்கின்ற தகவல், **புள்ளி** விவரங்களும் எவையினும் எந்த ஒரு நிலையிலாவது ஒரு பகுதியால் பொய்யானதாக அல்லது தவறான வழியாக இருப்பின், திட்டம் நிராகரிக்கப்படும் என்றும், திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தாலும் கூட அதை எங்களுடைய நிறுவனத்தின் பொறுப்பிலும் **செலவிலும்** திரும்ப **பெறப்படும்** என்று **சொல்லியிருக்கிறார்கள்.** பொய்யான **ஆவணத்தை** கொடுத்து சில **சலுகைகள்** கொடுத்து இப்படி உரிமைகள் வாங்கி இருந்தாலும், அது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. இதை நாங்கள் நேரடியாக **மரியாதைக்குரிய மாசு கட்டுப்பாடு வாரிய பொறியாளருக்கு கூறுகிறோம்,** கடந்த ஆண்டு மாநில சுற்றச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி கொடுத்துள்ளார்கள். இங்கு இருக்கக் கூடிய DRO அல்லது **மாசு** கட்டுப்பாடு வாரியம் அனுமதி கொடுக்கிறது இல்லை. அவர்கள் இதே **பச்சாபாளையத்தில்** பல கருத்து **கேட்பு கூடத்தில் பேசிய** பின்பு அனுமதி கொடுத்திருந்தாங்க. அந்த **ஆவணத்தை** நாங்கள் **கொடுத்த பிறகு,** அவர்களுக்கு நீங்க எல்லாரும் சொன்னதுனால

பரிசீலித்தோம். **நீங்கள்** சொன்னதிலே குறைபாடு இருக்கிறது என்று சொன்னார்கள். அதுக்காகத் தான் சொல்கிறேன், இதில் வந்து **Member Secretary இருக்கிறா**ர், Chairman இருக்கிறார், பல்வேறு துறை சார்ந்த **அண்ணா பல்கலைகழகம்,** IIT, **அண்ணாமலை பல்கலைக்கழகத்தினுடைய முனைவர்கள்** ஒவ்வொரு துறை சார்ந்த வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் நாங்கள் பேசினோம். அவர்கள் கூறிய வார்த்தை என்னவென்றால், நாங்கள் எந்தக் கருத்து **கேட்பு கூட்ட** வீடியோவையும் பார்த்ததில்லை. கேட்டதுமில்லை, கூட்ட நடவடிக்கை குறிப்புகளை படித்ததில்லை. ஒரு 10 உளவுத்துறை அதிகாரிகளும் இருந்தார்கள். அனைத்தும் ரெக்கார்டாதான் இருக்கிறது. தமிழ்நாடு **அழிவதற்கு** நீங்க மிகப்பெரிய காரணமாக இருக்கீங்க. நீங்க ஒவ்வொரு **குவாரிக்கும்** ₹15 லட்ச ரூபாயிலிருந்து ₹50 லட்சம் **வாங்குவதாக, குவாரி உரிமை** அசோசியேஷனிலிருந்து முதல்வருக்குப் **புகார்** அளிக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சியில் பேசி இருக்கிறார்கள். அதை கூறியவுடன், இனிமேல் இது போன்ற தவறுகளை நாங்கள் செய்ய மாட்டோம் என்று ஒப்புதல் கொடுத்தார்கள். இப்ப நீங்க பாத்துட்டு இருக்கீங்க. தெளிவாக சொல்கிறேன். இத்தனை ஆவணங்கள உங்களுக்கு நாங்க காட்டுகிறோம். நீங்க சட்டத்திற்கு விரோதமாக யாராவது கையூட்டுப் பெற்றுக்கொண்டோ, வேறு வகையிலோ பெற்றால், நீங்கள் **சிறைக்கு செல்ல** வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் **சுட்டிக்காட்டுகிறேன்.** நன்றி. அதே போல, இந்தக் **குவாரியை பொறுத்தவரைக்கும், சாலைகளை** பொறுத்தவரைக்கும், சாலைகளில் அனுமதிக்கப்பட்ட எடை தான் கொண்டு செல்ல வேண்டும். தனி **மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள்** இருக்கிறார்கள். மாதம் மாதம் சாலை பாதுகாப்பு கூட்டம் நடக்கிறது. வருடம் ஒரு சாலை பாதுகாப்பு மாதம் கடைபிடிக்கிறார்கள். சாலைகளைப் பொறுத்தவரை, 2 ஆக்சில் என்று சொல்லக்கூடிய ஆறு சக்கர வாகனம் 18 டன். 3 ஆக்சில் என்று சொல்லக்கூடிய 10 சக்கர வாகனம் 28 டன்னும். 4 ஆக்சில் என்று சொல்லக்கூடிய 12 சக்கர வாகனம் 36 டன்னும். 5 ஆக்சில் என்று சொல்லக்கூடிய 14 சக்கர வாகனம் 48 டன்னும். 6 ஆக்சில் என்று சொல்லக்கூடிய 16 சக்கர வாகனம் 48 டன் வரைக்கும் தான் கற்கள் கொண்டு போக முடியும். ஆனால், இங்கு சாதாரணமான கிராமச் சாலையில் 10 டன் மட்டும் தான் கொண்டு செல்ல வேண்டும்.. இங்கு 10 டன் மட்டுமே கொண்டு போக வேண்டும். டிராக்டர் லோடில் கல்லோ, எம். சாண்டோ போட்டோம் என்றால் 10 டன் வரும். லாரியில் ஏற்றினால் 26 டன் வரும். கடந்த ஆண்டு

96000 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு சாலைகளுக்கு செலவு செய்திருக்கிறார்கள். எட்டு வருடம் இருக்க வேண்டிய சாலை **மூன்று மாதம்** கூட சரியாக இல்லை. மூன்று வருடத்தில் **அழிந்து** போய் விடுகிறது. மக்களுடைய வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது. தயவு செய்து அதிக எடை போகக்கூடிய வாகனத்திற்கு, உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி ஒரு டன்னுக்கு 20,000 ரூபாய், அடுத்தடுத்த டன்னுக்கு 2,000 ரூபாய் அபராதம் வசூலிக்க வேண்டும்.. மோட்டார் வாகனச்சட்டம் 113, 113(3), 114, 194, 199-ன் அடிப்படையில் நடவடிக்கை அபராதம் போட்டு எடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமில்ல, சாலைகளில் அதிக எடை கொண்ட வாகனங்கள் போனால், அதற்கு Public Property Damage Act போட்டு, அதற்கு கிரிமினல் வழக்கு போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் எதுவும் நடக்கவில்லை. இந்த மாதிரி எல்லாம் எதுவுமே செய்கிறது இல்லை. மக்களுடைய சொத்தை பாதுகாப்பதற்குத்தான் அதிகாரிகள் உள்ளார்கள். மக்களுடைய வரிப்பணத்தை முறையாக பயன்படுத்துவதற்கு உள்ள அதிகாரிகள், தவறாக இருந்தால், **அதன்** மீது உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, மிக முக்கியமாக, எல்லாரும் கவனத்தில் கொள்ள வேண்டியது, இந்த **கல்**குவாரி 35 மீட்டர் ஆழத்தில் கற்கள் வெட்டி எடுக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். 35 மீட்டர் என்று சொல்லும்பொழுது, 120 அடி ஆழம். இங்கு எந்த கிணறு 120 அடி ஆழத்தில் இருக்கிறது என்று கூறுங்கள். அப்பொழுது 120 அடி ஆழத்தில் இந்த கல்குவாரி அமைக்கப்படும் பொழுது எல்லா கிணற்றினுடைய தண்ணீரும் வற்றிவிடும். விவசாயம் அழிந்துவிடும். இந்தப் பகுதி விவசாயத்தில் **செழிப்பாக** இருக்கக்கூடிய பகுதி. நீர் திட்டங்களிள் **இயற்கையாக** கிடைக்கிறது. ஆனால் இப்படி எல்லா கிணறுகளும் வறட்சி ஆவதற்கான வழிவகைகளை இந்த குவாரி **ஏற்படுத்துகிறது**. அதுமட்டுமல்ல, இது மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டிருக்கக்கூடிய புத்தகம். (TNPCB & YOU) 2020-ல் மத்திய அரசினுடைய பொதுப்பணித்துறை வெளியிட்ட அறிக்கையை வைத்துதான் இங்கு சொல்லியிருக்கிறார்கள். பக்கம் 244-ல் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், கோவை மாவட்டம் சூலூர் தாலுக்காவில் இருக்கக்கூடிய அத்தனை குறுவட்டங்களும், அத்தனை கிராமங்களும் ஓவர் எக்ஸ்ப்ளாயிட் அதாவது ஓவர் எக்ஸ்ப்ளாயிட்னா, 100 விழுக்காடு தண்ணீரும் எடுக்கப்பட்டு விட்டது.

தண்ணீர் பூமியில் கிடைக்காது என்று அறிக்கை கொடுத்து உள்ளார்கள்.. இது நாங்க கொடுக்கவில்லை. மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்ட புத்தகம் இது. தண்ணீர் எங்கே போய்

தேடுவோம்? தண்ணீர் ஏற்கனவே ஓவர் எக்ஸ்ப்ளாயிட் ஆன பகுதி, இங்கு வந்து நிலத்தடி நீர் முழுக்க இல்லாமல் போய் விட்டது. நிலத்தடி நீரில், சேப்டி **செமி கிரிடிகல், கிரிடிகல்,** ஓவர் எக்ஸ்ப்ளாயிட் என்று சொல்லுவார்கள். இது ஓவர் எக்ஸ்ப்ளாயிட் ஆக உள்ளது **என்று** அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இந்த பகுதியை மீண்டும் **உயிரூட்டவேண்டிய** தேவை அரசுக்கு இருக்கிறது. இங்கு இருக்கிற மக்களை எல்லாம் **விரட்டி அடிப்பதற்கு** அல்ல. இந்த சண்முகம் குவாரி, **முந்நூறு மீட்டர் சுற்றளவில்** வீடு, வீட்டுமனைகள், அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், மற்றும் கோயில்கள் அனைத்தும் இருப்பதால் சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. **மாண்புமிகு அதிகாரிகள்** இதற்கு மேல் நீங்கள் கொடுத்தால் அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். மாவட்ட வருவாய் **அலுவலருக்கு** ஒரு கோரிக்கை. உங்களுடைய பொறுப்பில் இருக்கக்கூடிய கிராம நிர்வாக அலுவலர் 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள் இல்லை என்று பொய்யான ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். இதன் மீது, **நீங்கள்** உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பல VAO க்கள் **அவர்களுடைய** அறியாமையின் காரணமாக தவறாக கொடுத்துள்ளார்கள். நாங்க யாரையும் வேலையை விட்டு நீக்க வேண்டும் என்கிற விருப்பமில்லை. ஆனால் அதைச் செய்யவில்லை என்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். **திருச்செங்கோட்டில்,** ஒரு VAO மேலே கேஸ் போட்டிருக்கிறார்கள். கரூரில் கலெக்டர், ஒரு VAO மேலே FIR போட்டு உள்ளார்கள். பொய்யான ஆவணங்கள், அதாவது, நாம் ஒரு செக்கை கையாண்டு அது பவுன்ஸ் ஆயிடுச்சுன்னா, மோசடி இல்லையா? அப்போ VAO **வந்து** மோசடியான வகையில் ஒரு அறிக்கையை கொடுத்தால், அது டாக்குமெண்ட் மோசடி. இப்பொழுது டாக்குமெண்ட் மோசடி VAO செய்துள்ளார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இந்த கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம். இந்த **குவாரி புலத்தை சுற்றி** 300 மீட்டர் சுற்றளவில் வீடு, வீட்டு மனை, அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், கோயில்கள் மற்றும் 500 மீட்டர் சுற்றளவில் மேல்நிலைத் தொட்டி மற்றும் நீர் ஏற்றும் நிலையங்கள், போர்வெல் ஆகியவை **இருப்பதாலும்**, இங்கே முறையான **சட்ட விதிகள் எதையும்** பின்பற்றாத காரணத்தினால், **சண்முகம் கல்குவாரிக்கு** சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது, கொடுக்கக்கூடாது. இதற்கு மேல் வேறுவகையில் நீங்கள் முயன்றால், அதற்கான எதிர்வினையையும்

சந்திக்க வேண்டும் என, SEIAA அதிகாரிகளுக்கு தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி **விடைபெறுகிறேன்.** வணக்கம்.

19. **திரு.சோலையப்பன்.**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் **சோலையப்பன். இதே** ஊருதான். கல்லுக்குழிக்கு அருகில், ஒரு 300 மீட்டரில் தோட்டத்து வீடு உள்ளது. கல்லுக்குழி தற்போது **ஆறு மாதமாக இயங்கவில்லை.** இதற்கு முன்பு இயங்கும் போது, அந்த அதிர்வினால் வீட்டில் தூங்கவே முடியாது. ஏனென்றால், **இரவு முழுவதும் கற்கள் உடைத்துகொன்டே இருப்பார்கள்.** அப்பொழுது வீட்டில் **சரியாக** தூங்கவே முடியாது. இது ஒரு பிரச்சனை. இன்னொன்று, வெடி மூலம், ஒரு 10 நிமிடத்திற்கு ரொம்ப **புகைமூட்டமாக** இருக்கும். இப்போது லைசென்ஸ் கொடுக்க **இருக்கும்** குவாரிக்கு அது ஒரு பிரச்சனை, இப்போது போட்டுருக்குற Boundary-லிருந்து நம்ம வீடு, கிட்டத்தட்ட ஒரு 100 மீட்டர் தான் இருக்கும். அது புது வீடு. **ஏற்கனவே வெடிப்புகள் ஏற்பட்டு** இருக்கு. நான் வீட்டில் இருக்கும் போது, எப்ப வெடி வைக்கிறாங்களோ, அப்போது நில அதிர்வு ஏற்பட்டிருக்கு. இந்த மாதிரி பாதிப்பு எல்லாம் ரொம்ப இருக்கிறது. இந்த மாதிரி பாதிப்பு எல்லாம் கண்டிப்பாக வரும். இது தங்கள் **கவனத்திற்கு** முன் வைக்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

20. **திரு. இலக்கிய ரவிந்திரன், சூலூர்.**

என் பெயர் இலக்கிய ரவிந்திரன், சூலூரிலிருந்து வருகிறேன். நான் அப்பவே கருத்துச் சொல்லி விட்டேன். நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுப்பீர்கள், அது எல்லாமே சரிதான். ஆனால் அரசு அதிகாரிகளை கையூட்டுப் பெற்று, கொண்டு, அதை மீறி அனுமதி கொடுத்தீர்களானால், விளைவுகளை சந்திக்க வேண்டும் என்கிற வார்த்தை எல்லாம், தவறான வார்த்தைகள். , அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். ஒரு அரசு அதிகாரிகளை பேசும்போது, நீங்கள் மீறி கொடுத்தீர்கள் என்றால், நாங்க போராட்டம் நடத்த உள்ளோம் என்று கூறுவது சரி. ஒரு நீதி வழங்கக்கூடிய இடத்துல நீங்க இருக்கிறீர்கள், நீங்கள் பொதுவாக சட்டம் என்னவோ, அதைத்தான் நீங்கள் பண்ண முடியும், சட்டத்தை மீறி உங்களால எதுவுமே பண்ண முடியாது. அது எல்லாம் தெரிஞ்சும் கூட, ஐயா வந்து, கையூட்டுப் பெற்றுக்கொண்டு, அப்படி சொல்கிற வார்த்தையை

வன்மையாக கண்டிக்கிறோம். அதுபோக மிரட்டல் மொழியில் பேசியதற்கு, ஒரு சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, தாழ்மையுடன் கேட்டு **விடைபெறுகிறேன்.**

21 **திரு.சதீஷ்,** பெரிய**குயிலி.**

என் பெயர் சதீஷ், ஊர் பெரிய**குயிலி.** இப்பொழுது இந்த **பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் எதற்காக** நடக்கிறது, இதில் அந்த கல் குவாரியினால் பாதிக்கப்படுவது யார் என்று, ஐயா கொஞ்சம் தெரிஞ்சுக்கலாங்களா?

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கருத்துக்களை மட்டும் பதிவு செய்யுமாறு கூறினார்.**

**திரு.சதீஷ்,** பெரிய**குயிலி.**

அதற்கு சதீஷ் அவர்கள் ஒரு சில விஷயங்கள் தெரியமாட்டேங்குதுங்க

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** அவர்கள்

கேள்வி-பதில் தருணம் கிடையாது என்று கூறினார்.

**மீண்டும் திரு.சதீஷ்.,** அவர்கள்

கேள்வி-பதில் தருணம் எங்க இருக்கு? எங்களுக்கு சில விஷயங்கள் தெரியவில்லை. இப்பொழுது மக்கள் கருத்து கேட்பு நடக்கிறது இல்லைங்களா? அறிவிப்புப் பலகை வந்து, எவ்வளவு நாளைக்கு முன்னால் வைக்க வேண்டும் என்றும், மக்கள் கிட்ட எவ்வளவு நாளைக்கு முன்னாடி தெரிவிக்க வேண்டும் என்றும், என்பதை சொல்லுங்கள். இப்போது நாளிதழில் விளம்பரம் கொடுத்தால் போதும்?

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**: அவர்கள்

சட்டப்படி நாளிதழில் விளம்பரம் கொடுக்க வேண்டும். கொடுக்கப்பட்டுள்ளது . அவ்வளவுதான் உட்காருங்க என்று கூறினார்.

**திரு.சதீஷ்.,** பெரியகுயிலி:

சரிங்க, நீங்க கொடுக்கிற விளம்பரம் கொடுக்கிறீங்க. ஹேண்ட் அவுட் மூலமாக வந்து கொடுக்கலாம். எந்த இடத்தில் கொடுத்திருக்காங்க, என்ன அப்படின்னு சொல்லிவிட்டீர்கள், என்கிட்டப் பத்திரிக்கை கொடுத்தாங்க, நான் அதையும் வந்து ஒத்துக்கிறேன். இரண்டு நாளைக்கு முன்னாடி கொடுத்தாங்க. ஊருக்கு ஊரு, நீங்கள் அந்த கல் குவாரியினால் பாதிக்கப்படுவது பெரியகுயிலி. பெரிய குயிலிக்கு கிராம மக்களைத் தவிர, வேறு யாரும் எதுவும் சொல்லி இருக்கிறார்களா? இப்ப இந்த கூட்டத்தில் கருத்து தெரிவித்தவர்கள் வேறு ஊர்களைச் சார்ந்தவர்கள். அவர்கள் தான் தெரிவித்தார்களே தவிர, பொது மக்கள், அதாவது பெரியகுயிலி கிராமத்திலிருந்து யாருமே பேசவில்லை, ஒன்று, இரண்டு பேர் தான் பேசினார்கள். இல்லை, இதில் பாதிக்கப்படுவது பெரியகுயிலி மக்கள் தான். நீங்கள் கருத்து கேட்க வேண்டும் என்றால் , பெரியகுயிலி மக்களிடம் தான் முக்கால்வாசி கருத்துக்கள் கேட்க வேண்டும். நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் பெரிய குயிலி பொதுமக்களுடைய கருத்துக்களை கேட்க வேண்டும்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**:

பச்சாபாளையத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடத்துகிறோம். அதை நடத்துவதற்கு முன்னல் உங்களுக்கு விளம்பரம் கொடுத்து உள்ளோம். எல்லா ஊரில் இருந்து பொதுமக்கள் வந்து கருத்து சொல்வதற்குத்தான் விளம்பரம் கொடுத்து இருக்கிறோம்.. என்ன கருத்துக்கள், யார் வேண்டும் என்றாலும் சொல்லலாம் , யாரையும் தடுக்கவில்லை.. இப்பொழுது யார் உங்களை தடுத்தது? இப்போது நீங்கள் வருகிறீர்கள் . ஐயா, நீங்கள் எந்த ஊர்? பெரியகுயிலி அப்ப உங்களுக்கு எப்படி தெரிந்தது? அதாவது போர்டு வைக்கப்பட்டுள்ளது.. அதாவது ஊருக்குள்ள எல்லாருமே படிக்கிறவர்கள். நூற்றுக்கு 90, பேர், 70 சதவிகிதம் பேர் தினசரி நாளிதழ் படிக்கிறவர்கள். எல்லாத்துக்கும் தெரிய வேண்டும் இல்லைங்களா? சட்டப்படி சொல்வதைத்தான் செய்யமுடியும். சட்டப்படி தினசரியில் விளம்பரம் கொடுக்க சொல்லி இருக்காங்க, விளம்பரம் கொடுத்து இருக்கிறோம்.. பொதுமக்களுக்கு தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் நோட்டீஸ் கொடுத்து இருக்கிறோம்.,. இப்பொழுது விளம்பர பலகை வைத்திருக்கிறோம்..

**திரு.சதீஷ்.,** பெரியகுயிலி:

ஐயா, விளம்பர பலகை வைக்க ஒரு குறிப்பிட்ட தேதி உள்ளதா என்று கேட்கிறேன்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

சட்டப்படி இல்லை, ஆனால் பொதுமக்களுக்கு ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நாங்கள் அந்த கிராமத்திலே நோட்டீஸ் கொடுக்கிறோம், விளம்பர பலகை வைக்கிறோம்.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் பேசும் போது இந்த கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி தந்த மாவட்ட வருவாய் அலுவர் அவர்களுக்கும் , தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொதுமக்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், சுற்றுசூழல் ஆர்வலர்கள் ஆகியோருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம் எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மனுக்களின் எண்ணிக்கை : 2**

3/6/25

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

03/06/2025

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்,**
**(நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலைகள்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**